# குதம்பைச் சித்தரின் யோகமும் நிலையாமையும்

**முனைவர் பொ.ராணி,**

**உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,**

**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்**

**மகளிர் உயர்கல்விநிறுவனம்,**

**கோயம்புத்தூர் - 641 043.**

**4**

**ஆய்வுச் சுருக்கம்**

உடல் அழியும், இளமை நீங்கும், அழகுசிதையும், இன்பம், செல்வம் நிலைக்காது என்று நிலையாமைக் கொள்கையை சித்தர்கள் தங்கள் பாடல்களில் வலியுறுத்தியுள்ளனர். ஆசைகள் அனைத்தும் பல இன்னல்களுக்கு காரணம் என்பதை அறிந்து பற்றற்ற வாழ்வை நாம் மேற்கொள்ளவேண்டும் என்று ஆதி அந்தமில்லா இறைவனைத் தேடுவதே சிறந்தது என்றும் இதற்கு எதிர்நிலையில் வாழ்வியல் சார்ந்த பொன், பொருள், இளமை போன்றவற்றால் எந்தவித பயனும் இல்லை என்பதை உணர்ந்து அவற்றை விட்டு விலக்க வேண்டும் என்றும் வற்புறுத்துகின்றனர். அவ்வகையில் குதம்பைச்சித்தர் பாடல்களில் இடம் பெற்றுள்ள யோக நெறி மற்றும் நிலையாமை குறித்த செய்திகளைப் பதிவு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள் :** யோக நெறி, பக்தி நெறி, முக்தி நெறி, நிலையாமை,வாழ்வியல், துறவுநிலை.

**முன்னுரை**

நம் உடலை ஆரோக்கியமாக வைத்து கொள்வதற்கும் மனதை ஒருமுகப்படுத்துவதற்கும் தியானம் செய்வதற்கும் யோகம் அவசியமாகிறது. தன்னை மறந்து அமர்ந்திருக்கும் தியான நிலையில் உறுதியான மனதுடன் இருக்க வேண்டும். எண்ணங்களைத் தளர்த்தி வெளியேற்றும் சிறந்த உத்தியாக அமைகிறது. தியானத்தினால் தானியங்கி நரம்பு மண்டலத்தை நமக்கு உகந்த படி கட்டுப்படுத்த முடிகிறது. மக்களின் வாழ்வியல் பயணத்தின் அறியாமையை அகற்றுவதற்கு சித்தர் பாடல்கள் துணைபுரிகின்றன. நிலையல்லாதவைகளை நிலையானது என்றெண்ணி, அதில் மனம் மயங்கி வாழ்க்கையை வீணடிக்காமல், நிலையான பேரருளை உணர்ந்து வாழ்வது சிறப்பாகும். நமது இளமை, உடல், உயிர், பொருள் ஆகியவை அழியக் கூடியவை. எந்த ஒரு உயிரும் மற்றொரு உயிருக்காக காத்திருப்பதில்லை. அதனதன் காலம் வரும் போது அழிந்து போகின்றது. நிலையாமை மட்டும் தான் இந்த உலகின் நிலையான உண்மை என்பதை உணர்ந்து வாழ வேண்டும்.

**யோக நெறி**

ஆசையையை அடக்கி, மனத்தைக் கட்டுப்படுத்துவதே யோகநெறியாகும். மனத்தைக்

கட்டுப்படுத்த எல்லாம் வல்ல பரம்பொருளாகிய சிவனின் மீது அன்பு வைத்து சிறந்த ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். தன்னை அறிவதற்கும் இறைவனை அறிவதற்கும் முற்படுகிறார்கள். ஆனால் உடலும், உடலைச் சார்ந்த இயக்கங்களும், எண்ணங்களும் தன்னுள் இயங்கும் உண்மைச் சக்தியை மறைத்து விடுகின்றனர். இறைவனே உடலில் இயங்கும் எல்லா அணுக்களிலும் படர்ந்துள்ளான் என்பதைப் பற்றிய அறிவே மேலான அறிவாகும். உண்மைப் பொருளாகிய இறைவனைக் கண்டு தெளிந்த மெய்ஞானிகள் மெய்யாகிய உடலில் நீடித்து இருக்க கூடிய உயிரை போற்ற மாட்டார்கள். இதனை,

**“காலனை வென்ற கருத்தறி வாளர்க்குக்**

**கோலங்கள் ஏதுக்கடி” (240)**

நீண்ட நாள் உயிர் வாழும் தன்மையை இயல்பாகவே பெற்றிருப்பதால் மரணத்தை அவர்களாகவே நிர்ணயித்துக் கொள்கின்றனர். யோக சக்தி படைத்தவர்கள் எமனை வென்றவர்கள் ஆவார்கள். அவர்களை எமன் நெருங்க மாட்டான். இந்நிலையில் அட்டாங்க யோகத்தில் ஒன்றான வேண்டிய வடிவமெடுக்கும் ஈசத்துவம் தேவையில்லை என்பது குதம்பைச் சித்தரின் கருத்தாகும்.

இறைவனாகிய உண்மைப் பொருளைக் கண்டு தெளிந்தவர்கள் தங்கள் உடலை நீடித்து வாழவைக்கும் காயகற்ப முறைகளை நாடி வீணாக பொழுதை கழிக்க மாட்டார்கள் என்பதை,

**“மெய்ப்பொருள் கண்டு விளங்கும் மெய்ஞானிக்குக்**

**கற்பங்கள் ஏதுக்கடி - குதம்பாய்” (216)**

இந்த உலகம் நிலையற்றது என்றும் வெட்ட வெளியாகிய உலக இயக்கமே நிலையானது என்ற கொள்கைகளை உடைய மெய்ஞ்ஞானியர்க்குப் புற உடலுக்கு வலிமை தருகின்ற காயகற்ப மருந்துகள் எதற்கு? என்று தம் பாடல்களில் எடுத்துரைத்துள்ளார்.

**முக்தி நெறி**

இன்பத்தைத் தருகின்ற மெய்யறிவு மற்றும் தன்னுள் இருக்கக்கூடிய அறியாமை, துன்பம், குற்றங்களை நீக்கி இன்பம் பயக்கும் மெய்யுணர்ச்சியை அடைவதற்கு வீடுபேறு என்ற நிலையை அடைவதே முக்தி நெறியாகும். மீண்டும் பிறக்கக் கூடிய நிலை இல்லாது இருப்பது முக்தி நெறி என்பதை,

**“செத்துப் பிறகின்ற தேவைத் துதிப்போர்க்கு**
**முத்திதான் இல்லையடி குதம்பாய்!**

**முத்திதான் இல்லையடி” (03)**

இப்பாடலில்,இறந்து மீண்டும் மீண்டும் பிறக்கும் தேவர்களை, வேள்வியால் வழிபடுகின்ற

மக்களுக்கு, மீண்டும் பிறக்கக் கூடிய நிலை இல்லாது முத்தி நிலை என்பது உண்டு என்று தம் பாடலில் விள்ளகியுள்ளார்.

**முத்திநிலை பெறும் வழி**

புலன் இன்பம் என்பது ஆன்மாவுடன் இணையும் யோகமார்க்கத்திற்கு எதிராக இருத்தல் கூடாது. பற்றினை துறந்தால் மட்டுமே இறைவனை உணர இயலும் எனும் நம்பிக்கை மக்களிடம் உள்ளது. என்பதை,

**“பற்றற நின்றானைப் பற்றறப் பற்றிடக்**
**கற்றார்க்கு முத்தியடி குதம்பாய்**
**கற்றார்க்கு முத்தியடி” (52)**

எதிலும் பற்றில்லாதவராக யார் இருக்கிறாரோ அவரிடம் மட்டும் பற்றுக் கொள்ள வேண்டும். துறவறம் மேற்கொள்பவர்கள் தம் பற்றுகளை விட்டொழிப்பதற்கு யோகா நெறியே சிறந்ததாகும் என்று இப்பாடலில் புலப்படுத்தியுள்ளார்.

**இளமை நிலையாமை**

மனித வாழ்வில் மனிதன் மனதை தூய்மையாக வைத்திருப்பதை விட உடலையே தூய்மையாக வைக்க எண்ணகின்றனர். நம் உடல் உயிரைச் சுமக்கும் வெறும் கருவி எனக்கொள்ளாமல் அதனைப் போற்றி பாதுகாத்து வருகின்றனர். உடல் நாற்றம் வீசக்கூடியது என்றும் எப்போதும் இளமையுடன் இருக்காது என்றும் முதுமையடைந்து சாதலை அடையும் என்கின்றனர் சித்தர்கள். மனிதர்கள் தன் இளமைக் காலத்தை பெரிதாக நினைத்து வாழ்கின்றனர். இப்பருவம் அழியக்கூடியது தான் என்பதை,

**“பிறக்கும்போது உள்ள பெருமையைப் போலவே**
**இறக்கும் போது எய்துவிடும் குதம்பாய்” (82)**

எல்லோருக்கும் இளமை வரும் போய்விடும். முதுமையில் இளமை காலங்களின் நினைவுகள் மட்டுமே வரும். ஆனால் இளமை மீண்டும் வாரது என்பதே உண்மையாகும் என்று பாடியுள்ளார்.

**செல்வ நிலையாமை**

செல்வம் நிலையற்றது. அதன்மேல் பற்றுவைத்தால் முக்தி கிடைக்காது என்பது சித்தர்களின் கருத்தாகும். செல்வத்தை நிலையென்று கொண்டவர்களை நோக்கி,

**“தேடிய செம்பொன்னும் செத்தபோது உன்னோடு**
**நாடி வருவதுண்டோ**
**போம்போது தேடும் பொருளில் அணுவேணும்**
**சாம்போது தான் வருமோ (102-03)**

என்ற பாடலில் நாளும்நாளும் தேடிய செல்வங்கள் யாவும் சாவும் போது துணைக்கு வாரது என்றும் ஒரு மனிதன் எவ்வளவுதான் பொருள் சேர்த்தாலும் கடைசியில் அவனுக்கு மண் மட்டுமே சொந்தமாகும் என்றும் குறிப்பிடுகின்றார்.

மனிதன் தனக்கு தேவையான உணவு, உடை, இருப்பிடம் என இவைகளைச் சேகரித்தப்பின் தன் குடும்பத்திற்கும், தன் எதிர்காலத்திற்கும், தன்னைச் சார்ந்தவர்களுக்கும் என சேகரித்துக் கொண்டே இருக்கிறான். தான் இறந்தபின் தான் சேகரித்த பணம், தன்னுடன் வருவதில்லை என்பதை,

**"தேடிய செம்பொன்னும் செத்த போதுன்னோடு**

**நாடி வருதுண்டோ குதம்பாய்" (103)**

வாழ்வியல் நாம் தேடிவைத்தப் பொருள், நாம் இறந்தபின் நம்மோடு சேர்ந்து வருவதில்லை என்றும் ஒரு மனிதன் எவ்வளவு தான் சேர்த்தாலும் கடைசியில் அவனுக்கு மண் மட்டுமே சொந்தமாகும் என்ற கருத்தை தம் பாடலில் பதிவு செய்துள்ளார்.

**"போம் போது தேடியசெல்வம் அணுவேனும்**

**சாம் போதுதான் வருமோ" (104)**

பல இடங்களில் நாடி சென்று தேடிய பொருளில் அணுவளவாவது நம்முடன் கூட வருவதில்லை என்பதை வலியுறுத்தியுள்ளார்.

நம்மை வந்தடையும் செல்வம் நிலையற்றது என்பதை உணர்ந்து அதைக் கொண்டு அப்பொழுதே நிலையான நற்செயல்களில் ஈடுபடவேண்டும்.

**"காசினிமுற்றாயுள் கைவசம் ஆயினும்**

**தூசேனும் பின் வருமோ" (105)**

உலகம் முழுவதும் கைவசம் ஆனாலும் ஒருகாசு அளவுகூட நாம் சாகும் போது பின் வருவதில்லை என்று பாடியுள்ளார்.

**உறவுகள் நிலையாமை**

தனிமனிதர்களை சமூகக் குழுக்களாக ஒழுங்குபடுத்துவதற்கான அடிப்படையான அம்சம் உறவுமுறை ஆகும். இல்லறத்தில் உறவுபாலம் அமைப்பவர்கள் சுற்றத்தார்கள். இத்தகைய சுற்றத்தார்கள் நமது இறுதி நாளில் நம்முடன் துணையாக வரமாட்டார்கள் என்பதை,

**"உற்றார் உறவினர் ஊரார் பிறந்தவர்**

**பெற்றார் துணையாவரோ" (106)**

பெற்றோர், உடன் பிறந்தோர், உற்றார், உறவினர், ஊரார் போன்றோர் நாம் இறக்கும் தருவாயில் நம்மோடு துணையாக வரமாட்டார்கள் என்ற கருத்தை எடுத்துரைத்துள்ளார்.

**வாழ்க்கை நிலையாமை**

வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்து நம் உயிர் இருக்கும் போதே உயர்ந்த நற்பணிகளை செய்திட வேண்டும் என்பதை,

**“மெய்ப்பணி கொள்ளாத மேதினி மாந்தர்க்கு**

**பொய்ப் பணி ஏதுக்கடி” (107)**

மெய்யான பணியை மேற்கொள்ளாத உலகமாந்தர்க்கு பொய்யான அணிகலன்கள் எப்போதும் அழகு தராது என்று குறிப்பிட்டுள்ளார்.

**“விண்ணாசை தன்னை விரும்பாத மக்கட்கு**

**மண்ணாசை ஏதுக்கடி” (108)**

விண்ணுலகத்தின் மீது ஆசை கொள்ளாதவர்க்கு தற்போது வாழ்ந்துக் கொண்டிருக்கும் மண்ணின் மீது மட்டும் ஏன் ஆசை வைக்கவேண்டும் என்றும் நிலையாமையை உணர்ந்து மனிதன் தன் பேராசையை விடுத்து இவ்வுலகில் நல்வாழ்வு வாழவேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

**“சேனைகள் பூந்தேர் திரண்ட மனுத்திரன்**

**யானையும் நில்லாதடி” (109)**

சேனைகள் பூட்டப்பட்ட அழகிய தேர்களில் திரண்ட மக்கள், படைகள் மற்றும் யானைப் படைகள் அனைத்தும் நிலையற்றவை என்று குறிப்பிட்டுள்ளார்.

**ஆட்சி நிலையாமை**

ஆட்சி அதிகாரம் கொண்டுள்ள அரசு முறைகேடாகக் குடிமக்களிடம் அதிக அளவில் வரிவசூல் செய்வதை,

**“செங்கோல் செலுத்தும் செல்வம் ஓர்காலம்**

**தங்காது அழியு மடி” (110)**

செங்கோல் ஆட்சி செய்து மக்களின் வரிபணத்தை சேர்த்த செல்வம் என்றென்றும் தன்னுடன் நிலைத்து தங்காது அழியும் என்று வலியுறுத்தியுள்ளார்.

**பொருள் நிலையாமை**

பொருள் மீது கொண்ட ஆசையினால் மக்கள் பல அடுக்குடன் மாடமாளிகைகளும் செல்வசெழிப்புடனும் வாழ்வது தான் மகிழ்ச்சி என்று பொய்யான வாழ்க்கை வாழ்கின்றனர். ஆனால் அவையாவும் இறுதியில் கூட வருவதில்லை என்பதை உணர்ந்து பொருளீட்ட வேண்டும்.

**“கூடங்கள் மாடங்கள் கோபுரமாபுரம்**

**கூடவே வாரா தடி” (111)**

கூடங்கள், மாடங்கள், கோபுரங்கள், பெரிய கோட்டைகள் போன்றவை நம்முடன் சேர்ந்து வராது என்பதை தம் பாடல் பதிவு செய்துள்ளார்.

**தொகுப்புரை**

நாளை என்பது நம் கையில் இல்லை. எனவே இன்றே இப்போதே செய்ய வேண்டியதை உணர்ந்து செயல்பட வேண்டும். ‘உறங்கும் போது விடுகின்ற மூச்சு சுழிமாறிப் போனாலும்

போச்சு'என சித்தர்கள் நிலையாமை குறித்து கூறியுள்ளதை மனதில் கொண்டு நிகழ்காலத்தில் ஒவ்வொரு கணமும் முறையான எண்ணங்கள் மற்றும் முறையான செயல்பாடுகளுடன் நம் வாழ்க்கைப் பாதையை அமைத்துக்கொள்ள முயற்சி செய்யவேண்டும்.

இன்றைய நவீன கலாச்சார வாழ்வில் நிலையானது எதுவென்று அறியாத மக்களுக்கு நாளுக்கு நாள் ஆசை மட்டும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. பொருளீட்டும் ஆசையும் தேடலும் மக்களிடம் அதிகரிப்பதாய் எதுநிலையான பயன் தரக்கூடியது என்பதை உணராமல் அனைத்தையும் தனதாக்கிக் கொள்ளும் மனநிலை ஏற்பட்டு வருகின்றது. அத்தகைய மனநிலையை மாற்றி அமைத்திட சித்தர் பாடல்கள் வழி வகுத்துள்ளன.

**துணைநின்ற நூல்கள்**

1.சித்தர் பாடல்கள், அரு.இராமநாதன்,பிரேமா பிரசுரம், சென்னை.2011.

2.சித்தர் பாடல்கள், சி.எஸ்.முருகேசன், (பெரியஞானக்கோவை) சங்கர் பதிப்பகம், சென்னை, 2012.

3.பெரியஞானக்கோவை என வழங்கும் சித்தர் பாடல்கள், அரு.இராமநாதன், பிரேமாபிரசுரம். சென்னை, 2004.

4. திருக்குறள், பரிமேலழகர்(உ.ஆ), சாரதா பதிப்பகம், சென்னை,2004.

5. எளிய தமிழில் சித்தர் தத்துவம், எஸ்.கே. முருகன், சிக்ஸ்த் சென்ஸ் பதிப்பகம், சென்னை.2012.